அமரர்

# கோபால் துரைசிங்கம் (J.P)



## நினைவுப்பதிவுகள்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கோபால் துரைசிங்கம் (ஜே.பி)

ஆசிரியர் இ.சி.சுந்தரலிங்கம்
(மலர் ஆசிரியர்)

09.02.2007

நினைவு மலர் வெளியீடு
அமரரின் பிள்ளைகளும் குடும்பத்தினரும்
வல்வெட்டி, வல்வெட்டித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

எல்லோர்க்கும் நல்லவனாய்
எளிமைபுகழ் வாழ்வினனாய்
இன் சொல்லால் எவரையும்
தன்பால் ஈர்க்கும் பண்பினனாய்
வல்லவனாய் வையத்துள் வாழ்ந்து
எம்மை யெல்லாம் ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த
எமது குடும்பத்தின் குல விளக்கே
உன் திருப்பாதக் கமலத்தில்
இம் மலரை காணிக்கையாக
சமர்ப்பிக்கின்றோம்


— குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுப் பதிவுகள்

அன்னை அணைப்பில்
29 ♠ 11 ♠ 1931



ஆண்டவன் இணைப்பில்
09 ♠ 01 ♠ 2007

அமரர்

## கோபால் துரைசிங்கம் (ஜே.பி)

திதி வெண்பா

சீர்நிறை வியவருட செப்புதமிழ் மார்கழியில்
ஷஷ்டி உத்தரம் நீண்டபுகழ் மாமனிதன் – எங்கள்
துரை சிங்கம் செகம் விட்டு
சேர்ந்தனனே விண்லோகம் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரைசிங்கம் சோதியம்மா



அமரர்கள் இருவரின் இளம்ஜோடிப் படம்

மாதா பிதா குரு தெய்வம் ~ அவர்
மலரடி தினம் தினம்
வணங்குதல் செய்வோம்
மாதா பிதா குரு தெய்வம்

—பிள்ளைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவுகள் பகர்ந்தோர்...

01. மலர் ஆசிரியர்
02. ஈழத்தீபன்
03. வ.வேலும்மயிலும் (முன்னாள் பிரதேச செயலர்)
04. சி.சிவனேசன் (நாடாளுமன்ற உறுப்பினர்)
05. கி.இராஜதுரை (தலைவர், தர்மகுலசிங்கம் ச.ச.நிலையம்)
06. S.K.இராஜேந்திரன் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்)
07. தம்பு நேத்திரானந்தம் (கிராம உத்தியோகத்தர்)
08. கொ.குணசிங்கம் (ஆசிரிய ஆலோசகர்)
09. சி.கணபதிப்பிள்ளை (தலைவர், உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்)
10. தெணியான்
11. ம.தர்மலிங்கம் (இராமலிங்கம் ச.ச.நிலையம்)
12. செ.சதானந்தன் (ஓய்வுபெற்ற அதிபர்)
13. சி.செல்லையா (சமூக சேவையாளன்)
14. வே.அமிர்தலிங்கம் (ஓய்வுபெற்ற அதிபர்)
15. இ.வே.செல்வரட்ணம் (கனடா)
16. ஜெயசேகரம், அதிசயவனிதா (கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் ஆசிரியர் பார்வையில்... அமரர்...

இறபபும் பிறப்பும் இயற்கையின் நியதி. இவை இரண்டிற்கும் இடையில்தான் மனிதனின் வாழ்வு. வாழ்வது எல்லாம் வாழ்வு அல்ல. வாழ்வாங்கு வாழ்பவன்தான் மனிதன். அப்பேர்ப்பட்ட ஒரு மனிதன்தான் அமரர் கோபால் துரைசிங்கம் அவர்கள்.

அமரரின் செயற்பாடுகள், நடவடிக்கைகள் அனைத்தும் ஒரு தனித்துவமானது. அவரின் செயற்பாட்டால் ஏற்படும் வெற்றிகள், சாதனைகள் மக்களின் ஆதரவுகளைப் பார்த்த பல ஜதார்த்தவாதிகள் பொறாமைப்பட்டு அவரின் செயற்பாடுகளை முறியடிப்பதில் அதிக கவனம் செலுத்தினர். ஆனால் அவர்களின் செயற்பாட்டால் வரிப்புலியைப் பார்த்து நரி சூடுபோட்ட கதையாக முடிந்தன.

அப்படி அவரின் சுகயீன காலங்களிலும் அவரின் மக்கள்பணி ஓயவில்லை. அச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவரின் செயல்பாட்டிற்கு முட்டுக்கட்டை போட்டவர்களால் மக்களின் நன்மதிப்பைப் பெறமுடியாது தூக்கியெறியப்பட்டார்கள். மேலும் அவரின் செயற்பாடுகளை அவரின் சுகயீனகாலங்களில் ஏதோ ஒரு வேகத்தில் கைப்பற்றியவர்கள்கூட இன்று இடிந்துபோய் உள்ளார்கள். அவரின் சொல்நயம், செயல்பாடு, மக்கள் சேவைகளில் அவர் பின்பற்றும் பாங்கு, தங்களால் எப்படிச் செயற்படுத்தப்போகின்றோம் என்ற அச்சம் இன்று அப்பேர்ப்பட்ட எதிரிகளின் அடிவயிற்றைக்கூடக் கலங்கவைத்துள்ளது அமரரின் மறைவு.

இத்தனைக்கும் இவர் ஒரு அரசியல்வாதியுமல்ல. கட்சிவாதியுமல்ல. இவர் ஒரு சந்தர்ப்பவாதி. வரும் சந்தர்ப்பங்களைத் தமது சமூகமக்களுக்குப் பயன்படுத்தும் ஒரு சந்தர்ப்பவாதி.

இன்றும் தங்களை மக்களுக்குப் பலரால் இனம் காட்டமுடியவில்லை. ஆனால் மக்கள் தங்கள் தொண்டனான அமரர் துரைசிங்கம் அவர்களை வெகு விரைவில் இனங்கண்டு கொண்டார்கள்.

அப்பேர்ப்பட்ட ஒரு மக்கள் தொண்டனை பொது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலச்சேவையாளனின் மறைவு எமது சமுதாய மக்கள் மத்தியில் ஒரு பாரிய சேவை இடைவெளியை உண்டாக்கிவிட்டது.

இதை யாரால் நிரப்பமுடியும். எங்கள் அருந்தலைவர் தர்மகுலசிங்கத்தின் பின்பு எமது துரைசிங்கம்தான் எங்கள் அருந்தலைவரானார். இனி எங்கு சென்று தேடினும் அவர்போல் ஒரு தங்கம் கிடைக்காதே...

அமரரின் ஆத்மசாந்திக்காக அனைவரும் ஒன்று இணைந்து பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



ஆக்கம்
வடிவமைப்பு — **இ. சி. சுந்தரலிங்கம்** (ஈழத்தீபன்)
தொகுப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர் காவியம்

அமரர் கோபால் துரைசிங்கம் அவர்கள் 1931ஆம் ஆண்டு 11ஆம் மாதம் 29ஆம் திகதி வல்வெட்டியைச் சேர்ந்த கோபால் அவர்களுக்கும் வேர்க்குத்தியைச் சேர்ந்த தங்கம் அவர்களுக்கும் தவப்புதல்வனாகப் பிறந்தார்.

சாதிக் கொடுமைகள் தாண்டவமாடிய அக்காலத்தில் கிறிஸ்தவர்கள் மனிதநேயத்துடன் உருவாக்கிய கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் தனது ஆரம்பக்கல்வியை ஆரம்பித்தார். அப்போது அவரது நெருங்கிய பாடசாலை நண்பர்களாக விளங்கியவர்கள் சமரபாகுவைச் சேர்ந்த வேலுப்பிள்ளை அமிர்தலிங்கம், இளகாமத்தைச் சேர்ந்த மாணிக்கம் மார்க்கண்டு ஆகிய இருவருமாவர்

அடுத்து 1937ஆம் ஆண்டு உயர்கல்வியை ஆங்கிலமூலம் கற்பதற்காக உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரிக்கு விண்ணப்பித்தார்கள். அங்கு சாதிக்கொடுமைக்காரர்கள் இவர்களின் விண்ணப்பத்தினை ஏற்கக்கூடாது என பாடசாலை நிர்வாகத்தினரை அச்சுறுத்தினர்.

அன்றைய காலகட்டத்தில்தான் பாட்டாளிகளின் கூட்டாளியான அருந்தலைவர் தர்மகுலசிங்கம் (ஜெயம்) அவர்கள் எம் சமூகத்தினரை சமூகத்தில் சமஅந்தஸ்தில் கொண்டுவர அல்லும்பகலும் அயராது பாடுபட்டார். அவர் ஒரு படித்த நியாயவாதியாகவும் இருந்தமையாலும் அவர் ஓர் உயர்சாதியைச் சேர்ந்தவர் என்ற நன்மதிப்பு உயர் அதிகாரிகளுக்கு இருந்தமையாலும் அன்றைய அரசாங்கத்திற்கு இந்தப்பாடசாலை அனுமதிபற்றி முறைப்பாடு நியாயபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது. அதன் காரணமாக அரசாங்கம் விஷேட அதிகாரத்துடன் மேற்படி சிறுபான்மை இனமாணவர்களான இந்த மூன்று மாணவர்களையும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் சேர்க்குமாறு உத்தரவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய காலகட்டத்தில் மேற்படி கல்லூரி அதிபராக இருந்தவர் கே.ரி.ஜோன் என்பவராவார். இவர் மனிதநேயமும் துணிச்சலும் உள்ளவர். சாதிவேடதாரிகளின் பலத்த அச்சுறுத்தல் மத்தியிலும் துணிந்து மேற்படி அமரர் உட்பட மூன்று மாணவர்களையும் ஏற்றுக்கொண்டார்.

அன்றைய காலகட்டத்தில் உயர்சாதி மாணவர்கள் போல் அரைக்களிசான் வெள்ளைச் சேட்டுப் போட இயலாது. காரணம் மேலவை மாணவர்கள் காற்சட்டை சேட் போட்டுக்கொண்டு போகும் சிறுபான்மை மாணவர்களின் உடைகள்மீது மையோ அல்லது சேறு போன்றவற்றைப் பூசிவிடுவார்கள். அடுத்து இன்றுபோல் அன்றும் இந்த மூன்றுபேருக்கும் விசேடபாதுகாப்புப் படை தேள்வைப்பட்டது. அப்படையில் அமரரின் சிறியதந்தையாரான காசிப்பிள்ளை, மார்க்கண்டு அவர்களின் தந்தை மாணிக்கம், அமிர்தலிங்கம் அவர்களின் தந்தை வேலுப்பிள்ளை ஆகியோர் அங்கம் வகித்தனர். இவர்கள் மேற்படி மாணவர்களைக் காலையில் பாடசாலையில் விட்டுவிட்டு சென்று மாலையில் பாடசாலை வாயிலில் நின்று அவர்களை அழைத்துச் செல்வார்கள். அவ்வளவு அச்சுறுத்தல் மத்தியில் கல்வியைப் பயின்றார். இவர் அப்போது விளையாட்டும் சுட்டித்தனமும உள்ளதால் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்வதில்லை. இதன்காரணமாக கல்வியை இடையில் நிறுத்தினார். பின்பு பெற்றோரின் தூண்டுதலால் கல்வியை மீண்டும் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் தொடர்ந்தார். அப்போதுதான் இவருக்கு நடனங்களைப் பார்ப்பதிலும் பாடல்களை, இசைகளை ரசிப்பதிலும் ஆர்வம் ஏற்பட்டது.

அக்காலகட்டத்தில் சின்னக்கண்டு என்பவரின் இரண்டாவது மகள் சோதியம்மா அவர்கள் மேல் காதல் ஏற்பட்டது. இதன்காரணமாக இவர் கல்வியை இடைநடுவில் கைவிட்டார். இவரது காதலுக்கு அவரின் உறவினர்கள் மத்தியில் பெரும் எதிர்ப்பு ஏற்பட்டது. அக்காலத்தில் சோதியம்மா என்பவரும் அவரது சகோதரர்களும் வல்வெட்டித்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் கல்விகற்று வந்தனர். அப்போது இவரின் கவர்ச்சியான பேச்சு எவரையும் கவர்ந்துவிடும். இதையே ஆயுதமாகப் பயன்படுத்தி அப்பாடசாலையின் அதிபரான உடுப்பிட்டியைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளையைக் கைக்குள் போட்டுக்கொண்டு தான் அவரின் தமயன் எனத்தெரிவித்து பாடசாலைக்குள் நுளைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைவேளைகளின்போது தனது காதலைத் தொடர்ந்தார். அத்துடன் பாடசாலை நாடகக் கலைவிழாப் போட்டிகளில் மாணவமாணவிகளைப் பங்குபற்றவைப்பதிலும் அவைகளைப் பழக்குவதிலும் ஒத்தாசை புரிந்தார்.

இந்தக் காலகட்டத்தில்தான் வதிரி மேற்கைச் சேர்ந்த புதுவளவு பல்கலைப் பண்டிதர் கிட்டிணபிள்ளை என்பவரிடம் ஆர்மோனியம் வாசிக்கக் கற்றுக்கொண்டு திறமையானார். இவர் ஆர்மோனியத் திறமையைக் கண்ட கலாவினோதன் அண்ணாச்சாமி ஆசிரியர் இவரைத் தனது நாடகக் கலைநிகழ்ச்சிகளுக்கு ஆஸ்தான ஆர்மோனியக் காரராகப் பயன்படுத்தினார்.

சந்தனமரத்துடன் சார்ந்த மரமும் அந்த மணம் என்பதுபோல கலாவினோதன் நாடகங்களைப் பார்த்த இவருக்கும் நாடக மோகம் ஏற்பட்டது. இதன் காரணமாக காத்தவராயன், பாமாருக்மணி போன்ற நாடகங்களைப் பழக்க ஆரம்பித்தார். இவை அன்றைய காலங்களில் யாழ் அரங்குகளில் மேடையேறின.இவர்களின் காதல் வாழ்க்கைக்கு இந்த நாடகக்கலைதான் முதற்படி. இவரின் நாடகங்களில் அவரின் காதலியான சோதியம்மாவுக்கு முக்கிய பாத்திரங்கள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

மேலும் இவர் கரப்பந்தாட்டத்திலும் முன்னணியில் விளங்கினார். இவரின் தந்தை தலைமையில் உருவாக்கப்பட்ட "குணசேகரா" கரப்பந்தாட்டக் கழகத்தில் இவரும் ஒரு முன்னணி கரப்பந்தாட்ட வீரராக விழங்கிப் பல சாதனைகளைப் புரிந்தார்.

பின்பு 1952ஆம் ஆண்டு தைப்பொங்கல் திருநாளில் சோதியம்மா அவர்களின் வீட்டில் வைத்து வேர்க்குத்தியைச் சேர்ந்த அமரரின் தாய்வழி உறவினரான நாரதக்கிட்டிணர் என்பவரது உதவியுடன் சமயாசார முறைப்படி திருமணம் செய்துகொண்டார்.

அக்காலகட்டத்தில் அவருக்கு கல்முனையில் இவரின் கல்விக்கமைய சென்றல் காம் (Central Camp) என்னும் இடத்தில் லிகிதர் வேலை கிடைத்து சிறிது காலம் அங்கு வேலை செய்தார். பின்பு அதையும் விட்டுவிட்டு ஊர் திரும்பினார்..

இவர் இத்தனை குழப்படிகள் செய்தபோதும் தாயார் இவருக்கு செல்லம் கொடுத்ததுடன் பக்கபலமாக பணமும் கொடுத்து உதவினார். இதன்காரணமாக இவர் முதன்முதல் சைக்கில் திருத்த வேலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடை ஒன்றை ஆரம்பித்தார். அத்துடன் அன்றைய காலங்களில் மின்விளக்குகள் இல்லாமையால் "பெற்றோமாக்ஸ்" விளக்கிற்கு அதிக கிராக்கி. அதனால் பெற்றோமாக்ஸ் வாடகைக்கு விட்டு வருமானம் பெருக்கினார். பின்பு ஒலிபெருக்கி வாடகைத் தொழிலை ஆரம்பித்தார். மேலும் மின்சார எஞ்சின் ஒன்றை விலைக்கு வாங்கி வாடகைக்கு விட்டு ஊதியத்தைப் பெருக்கிக்கொண்டாா. அக்காலங்களில்தான் பின்தங்கிய எமது சமுதாயத்தை கட்டியெழுப்பி முன்கொண்டு வரவேண்டுமென்ற சமுதாய சேவையினைத் தீவிரமாக்க முயன்றார்.

அதன்பலனாக தமது ஊரில் படித்த வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பினைத் தேடிக்கொடுக்கும் முயற்சியில் இறங்கினார். அதன் முதல்படியாக அன்றைய நாடாளுமன்ற உறுப்பினரான பொன்னமபலம் கந்தையா அவர்களை நேரில் சந்தித்து எமது சமுதாய நிலைப்பாட்டைத் தெரிவித்து எமது படித்த வாலிபர்களுக்கு உத்தியோக உதவி கோரினார். அதன்பயனாக கம்பர்மலை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் எமது சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஆசிரியர் வேலை கிடைத்தது. அதை இன்று அவர்களிற் சிலர் மறந்தாலும்கூட எமது சமுதாயம் மறக்கமுடியாது. அப்படியான ஒரு இடத்தை மக்கள் நெஞ்சில் நிறைந்தவர் அமரர் துரைசிங்கம் அவர்கள்.

அன்றைய யாழ்மாவட்ட சிறிலங்கா பிரமுகராக இருந்த கே.ரி.இராஜசிங்கத்தின் உதவியைப் பெற்று தர்மகுலசிங்கம் சனசமூக சூழலில் காணியற்றவர்களுக்கு காணி பெற்றுக்கொடுத்தார். அவரின் முழுதான உதவியும் ஊக்கத்தின் மொத்த உருவம்தான் இன்று தர்மகுலசிங்கம் சனசமூக வாசிகசாலை இருமாடிக் கட்டிடமாக உயர்ந்து நிற்கின்றது.

பின்பு எஸ்.குணரட்ணம் அவர்கள் காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன முகாமையாளராக இருந்தபோது அவருடன் நட்புக்கொண்டு அதில் எமது சமுதாய வாலிபர்களுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுத்தார்.

கே.ரி.ராஜசிங்கத்தின் உதவியினால் அவரின் காலத்தில் அமரர் அவர்களுக்கு சமாதானநீதவான் பட்டம் வழங்கப்பட்டது. கே.ரி.இராஜசிங்கம் தலைமையில் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் வழங்கப்பட்ட சமாதான நீதவான் பட்டத்தின்போது வடமராட்சி சமுதாயமே ஒரு அலையாகத் திரண்டு நின்று மலர்மாலைகள் அணிவித்து வாழ்த்திய காட்சியை யாரும் எழிதில் மறந்துவிடமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து சிறுபான்மைத்தமிழர் மகாசபையில் எம்.சி.சுப்பிரமணியம் (நியமன நாடாளுமன்ற உறுப்பினர்) அவர்கள் தலைமையில் இருந்தபோது அதில் இவரும் ஒரு முக்கிய உறுப்பினராக இருந்தார். அதன் காரணமாக இவருக்கு பலதரப்பட்டவர்களின் நட்புக்கள் கிடைத்தன. அதன்மூலம் எமது சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு அரசில் பல வேலைவாய்ப்புகளையும் காணியற்றவர்களுக்கான குடியேற்றத் திட்டங்களையும் பெற்றுக்கொடுத்தார். அன்றைய காலச் செயற்பாட்டின் காரணமாகவே பங்குரன் குடியிருப்பு, இலகடி குடியிருப்பு கதிரோலைக் குடியிருப்பு, காஞ்சுரப்புலம் குடியிருப்களை வீடற்றவர்களுக்குப் பெற்றுக்கொடுத்தார். மேலும் மின்சார வசதியையும் பெற்றுக்கொடுத்தார்.

அடுத்து அயலில் உள்ள நாவலடி உடுப்பிட்டிக் கிராமத்து மக்கள் தமக்கென ஒரு சொந்த பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் இன்றி தூரத்திலுள்ள சங்கக் கடைகளுக்கு அலைந்து திரிவதைக் கண்டு தனது தனிப்பட்ட செல்வாக்கினைப் பயன்படுத்தி அங்கு ஒரு சங்கக்கடை பெற்றுக்கொடுத்து உதவினார்.

மேலும் இவர் தமது சமூகத்தாருக்கு மட்டுமல்ல ஏனையோருக்கும் நட்புடன் உதவினார். ஒரு அமைச்சரையோ, வழக்கிற்கோ, பொலிஸ்நிலையத்திற்கோ செல்லவேண்டுமென்றால் ஒவ்வொருவரும் அமரரின் கதவில் அதிகாலையிலேயே பிரசன்னமாகி காட்சியளித்து தங்கள் காரியங்களைச் சாதித்துக் கொள்வார்கள்.

இவர் கிராமசபைத் தேர்தலில் நின்று அதிக வாக்கினால் வெற்றியீட்டி கிராமசபை உறுப்பினரானார். அக்காலங்களில் தனது கிராம வீதிகள், பொதுக்கிணறுகள், விதவைகள், அனாதைகளுக்கான அரச நிவாரணப் பணங்களை இலகுவாகப் பெற்றுக்கொடுத்தார்.

மேலும் உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாக உறுப்பினர்களில் இவரும் முக்கிய உறுப்பினர்களில் ஒருவரானார். இதன்காரணமாகவும் தனது சமூகத்தவர் பலருக்கு வேலை வாய்ப்புகள் பெற்றுக்கொடுத்தார்.

ஆனால் இத்தனைக்கும் அமரர் எந்தக் கட்சியையும் சேர்ந்தவர் அல்லர். எந்தக் கட்சி வந்தாலும் சரி, எந்த அதிகாரி வந்தாலும் தான் யார் எதற்காக வந்தேன் எனத் தமது சமுதாய தேவைகளையும் அவர்களின் நிலைப்பாட்டையும் தெரிவித்தே மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்துவந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் காரணமாக இவருக்கு பலதரப்பட்டவர்கள் குறிப்பாக அன்றைய கொம்யூனிஷ கட்சிப் பிரமுகர் வி.பொன்னம்பலம், பீற்றர் கெனமன், பொன்.கந்தையா, எம்.சிவசிதம்பரம் அன்றைய உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் மிஸ்.மான்,அன்றைய தபால் தந்தி அமைச்சர் குமாரசூரியர், சிறிலங்கா கட்சிப் பிரமுகர் கே.ரி.இராஜசிங்கம், எம்.சி.சுப்பிரமணியம், வைரமுத்து ஆசிரியர், தற்போது கனடாவில் வாழ்ந்துவரும் உடுப்பிட்டி நாவலடியைச் சேர்ந்த ஈ.வி.செல்வரட்ணம், முன்னாள் பருத்தித்துறை அரசாங்க அதிபர் வை.வேலும்மயிலும், எழுத்தாளர் டானியல், டொமினிக்ஜீவா, தெணியான், செல்லையா (சமாதானநீதவான்-துன்னாலை), வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கொம்யூனிசவாதி திருப்பதி, கம்பர்மலை தங்கவடிவேல் ஆசிரியர் ... எனப் பட்டியல் நீண்டுகொண்டே போகும்.

அன்னாரின் இல்வாழ்க்கையில் இரு ஆண்பிள்ளைகளும் இரு பெண் பிள்ளைகளும் பிறந்து வளர்ந்து இறுதிக்காலத்தில் அவருக்கு நிழல்குடைபோல ஆறுதல் வழங்கி அமரா அவர்களின் இறுதிப்பயணத்தைச் சீரும் சிறப்புமாக அனுப்பிவைத்தனர். இதுவே கோபால் துரைசிங்கம் அவர்களின் அமர காவியமாகும்.

– **மலர் ஆசிரியர்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கையறுநிலைப் பாக்கள்

**மூத்த மகள் லலிதா**

முந்தி வந்த முத்தென்று முத்தமழை பொழிந்தாயே
அந்திபகல் காத் தென்னை அரவணைத்து மகிழ்ந்தாயே
சந்திதெரு வீதியெல்லாம் சான்றோர்கள் சூழ்ந்துவர
பல்லக்கில் ஏறிபவனி நீ போகமனம் கொண்டீரோ
சிந்தைகனிந்து சிறப்புடனே நாம் வாழ
பகலிரவு பாராது பார்போற்ற உழைத்தாயே
சந்தையிற் கூட்டமதாய் சடுதியாய் மறைந்தாயே
பந்தமறுத்து பரனடியில் சாந்தி பெற்றிடுவாய்.

**மூத்த மகன் மோகன் (ஜேர்மனி)**

வீடு விட்டு பிரிந்து ஜேர்மனி நான் வருவேளை
போய்வா என்மகனே என அனுப்பினையே
நாடுபுகழ் மணமெனக்கு நீடுமன நிறைவோடு
இனசனத்தார் இணைந்திருக்க இயற்றினையே எமைவிட்டு
ஓடுகின்ற எண்ணமதை ஒளித்துவைத்தாய் கூறாதே
உன்கடமை முடித்தாய் என்கடமை முடித்திலதே
வீடுவந்து யாரையினிக் காண்பேன் விதியதுவோ
பப்பா என்றினிமேல் ஆரை யழைப்பேன்.

**இளையமகன் வாசன் (நோர்வே)**

பூமிதனை உதறிவிட்டு போய்விட்டாய் பப்பாவே
போனவிடந் தெரிந்திருந்தால் நாடிஉனை நான்வருவேன்
ஆவியுனை விட்டுப் பிரிகையிலே ஏதெலாம்
நினைத்தாயோ நினைவலைகள் ஓய்ந்தனவோ பப்பா
பாவியராய் நோர்வேயில் நானிருக்க தனிவழிநீ
போனாயே காலனுனை விட்டிலனோ பப்பா
கோயிலெனக் கும்பிட்டேன் கோடிதவம் செய்தாலும்
இனி யொருகாற் காண்பேனா இறைவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறுதிவரை பார்த்த இளையமகள் தேன்மொழி**

என்றும் என்னுடனே இருப்பேன்
என உறுதி மொழி சொன்னவரே
நானோ கதறியழ பிள்ளையோ மண்ணில் புரண்டுஅழ
என் ஆசைப்பப்பாவே என்னைக் கலங்கவிட்டுச் சென்றீரோ
அம்மாவோ இறந்த பின்பும் எமக்கு ஆறுதலாய் இருந்தவரே
என்னைச் சீரும் சிறப்புடன் வாழவைத்தீரே
பகலென்றும் பாராமல் இயமனுன்னைப் பிரித்தானே
எமனுக்கு கொடியோரைத் தெரியவில்லையே பப்பா.



**மருமகன்மார், மருமகள்மார்**

**பா.இராசேந்திரம் (ஓய்வுபெற் கிராமசேவகர்), இ.இராஜவர்மன், மோ.யோகதனேஸ்வரி (ஜேர்மனி), வா.தேவகி (நோர்வே)**

உன்றனல் மக்கள்தார மாயினோ மன்புமாமா
உயர்ந்தநற் பாசமெம்மேற் கொண்டனை மறவோம்நாமே
நன்றருந் துணையோடிங்கே நாமுயர் வாழ்வு வாழ
நன்றதைக் கண்டின்புற்றாய் நன்குணத்தவரன்றுன்னை
என்றுமூர் போற்ற நன்றாய் இரண்டாயிரத்தேழில்
எம்மை விட்டகன்றாய் நன்றே இங்கிது இயற்கை ஆனால்
சென்றதே னென்று நாங்கள் துயருறா திருக்கலாமோ
தூய நின்பிரிவால் வீடு சோபையிங் கிழந்ததிப்போ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேரப்பிள்ளைகள்**

1. **ஜீவிதா, திருபரன், நிருபரன்**
2. **மிரேன், மிதுஷா (ஜேர்மனி)**
3. **லவினா, அஷ்வினா (நோர்வே)**
4. **தேனுஷா**

கால்மீதும் தோள்மீதும் அணைத் தெம்மை
அரவணைத்து மகிழச் செய்யும் அருந்தாத்தா மறைந்தீரே
வரக்கண்டால் எமையிருத்தி வாஞ்சையுடன் தழுவுகின்ற
அன்பினை நினைந்து நினைந்து அகங்கலங்க விட்டதென்ன

**சகோதரி, சகோதரர்கள்**
**நவமணி, தங்கராணி, கமலலோஜினி**
**மாசிலாமணி, தவராசா.**

அண்ணா அண்ணா வென்றழுது கண்ணீரே
வற்றிக் கண்ணிரண்டும் புண்ணாகி நோகுதையோ
விண்ணாளும் தேவரென வீடுவந்து பன்னாளும்
பழகுமுன் னுருவம் கண்ணிற் தெரிகிறதே
கண்ணாரக் கண்டுகதை பேசிவிட்டே கினையே
கோலமிலாச் சீலமுகச் சிரிப்பதனை காண்பதெப்போ
மண்ணில் வாழ்விதுதான் மாறாத கொள்ளிவட்டம்
விண்ணிலேயிருந்து உன்பார்வை எம்பால் செலுத்துமண்ணா.

**உற்றார், உறவினர், நண்பர்கள்**

சொல்வதைச் செய்வதில் வல்லவராக வாழ்ந்த
துரைசிங்கம் எங்குபோனீர்
வெல்லும் அறிவுரையும் யாருக்கும் செய்வாய்
இன்று எங்கே!
உன்சமூகம் உயர்ந்துநிற்க
எண்ணுவாயே
என்றென்றும் உன்னிடத்தை உன்சேவை இடைவெளியே
என்செய்வோம்
உன்னுயிர் சாந்திபெற நாட்டத்துடன்
இறைவனிடம் வேண்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேற்றம்**

மலர்ந்த லர்ந்த பூ மரத்தில் சேர்வதுண்டோ - மதக்களிறின்
வாய்க்கரும்பு மீள்வதுண்டோ
மலர்ந்தவாய்ப்பேச்சு ஏவிவிட்டபாணம் திரும்பவே
வருவதுண்டோ இல்லையில்லை யிதுவுண்மை
துளிர்முக துரைசிங்கம் முன்வினை முடித்து
இறைபதமே நாடிவிட்டார் திரும்பிவரார்
மலர்முகத்தில் மாறாத சோகமது அறியினத்
துயர் நீங்கிப் போமளவும் இட்டுண்டிரும்.

*ஆக்கம்:-* **ஈழுத்தீபன்**



60வது பிறந்தநாளின்போது



மைத்துனர் குடும்பத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரங்கலுரை.

வல்வெட்டியைச் சேர்ந்த சமாதான நீதவான் திரு.கோபால் துரைசிங்கம் அவர்களின் மறைவு பற்றி கேள்வியுற்று ஆழ்ந்த கவலையுற்றேன்.

நான் வடமராட்சியில் உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய காலத்தில் திரு.துரைசிங்கம் எனக்கு நன்கு அறிமுகமானவர். அவர் சமூகப்பணிகள் சம்பந்தமாக என்னுடன் கலந்துரையாடிய சந்தர்ப்பங்கள் பல என்று கூறலாம். மக்களின் முன்னேற்றத்துக்கு அவர் அயராது பாடுபட்டவர்.

அவர் யாழ்மாவட்டத்தைச் சேர்ந்த சில பிரபலமான சமூகத் தலைவர்களுடன் இணைந்து மக்களின் முன்னேற்றத்துக்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார். காணியற்றோருக்கு அரசாங்கத்தின் மூலம் காணி பெற்றுக் கொடுப்பதற்கு முன்னின்று செயற்பட்டவர்.

அவர் ஒரு அரசியல்வாதியாக இருக்கவில்லை. அரசியலில் ஈடுபட்டு தனது சமூகப்பணிகளை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வைத்திருப்பதற்கு அவர் விரும்பவில்லை. தனது சமூகப்பணிகள் பரந்துபட்ட அளவில் மக்களுக்கு பயன் அளிக்க வேண்டுமென்ற குறிக்கோளுடன் அவர் சளைக்காது செயல்பட்டார்.

அவரின் சேவையை கருத்திற் கொண்டு அரசாங்கத்தினால் அவருக்கு சமாதான நீதவான் என்ற பட்டம் வழங்கப்பட்டது. அவரின் தன்னலமற்ற சமூக சேவைக்கு இது உறுதுணையாக அமைந்தது.

அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

**வ.வேலும்மயிலும்.**
(முன்னாள் பிரதேச செயலாளர்)
திருகோணமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஏழைகளின் தோழன் அமரர் துரை

எமது சமூக நல அக்கறையாளர்களில் அமரர் துரைசிங்கம் அவர்களும் ஒரு முதன்மையாளர் என்று சொன்னால் மிகையாகாது.

நண்பர் துரைசிங்கம் அவர்களை எனது பாடசாலைக் காலத்தில் எம்மவரின் சமுதாய மேம்பாட்டுப் போராட்டங்களின் பங்களிப்புகளில் பலதடவைகள் நான் சந்தித்திருக்கின்றேன். பழகியிருக்கின்றேன்.

அன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்கள்கூட செய்யத்தயங்கிய பல எமது சமதாயத்திற்கான பணிகளை அமரர் அவர்கள் சாதித்து முடித்ததை என்னால் காணமுடிந்தது. அவரின் எதிரிகூட அவரின்மூலம் பல உதவிகளைப் பெற்றதும் அனைவரும் அறிந்ததே.

பின்விளைவுகளைக்கூட பாராது முன்னின்று துணிந்து சொல்வார். எமது சமூகத்தில் உள்ளவர்களே குறிப்பாக படித்தவர்கள்கூட தான் யார் என்பதை சொல்லாது மூடிமறைந்துவாழும்போது அமரர் அவர்கள் நான் இன்னசாதி என்பதை முன்கூறியபடி பல சமூகசேவைகளில் சாதனை புரிந்திருக்கின்றார்.

இப்பேர்ப்பட்ட ஒரு சமூக சீர்திருத்தவாதி ஏழைகளின் தோழனை இன்றைய காலகட்டத்தில் இழந்ததை எம்மால் ஈடுசெய்ய முடியாது என்பதே எனது அபிப்பிராயம்.

மேலும் இவருக்கு கட்சிகள் கிடையாது.

எனினும் அனைத்துக் கட்சிப் பிரமுகர்களுடனும் மிக சகசமாக பழகுவார். அதேநேரம் தனது சமூகத்திற்குத் தேள்வையான விடயங்கள் தன் நிலைமைகள் ஆகியவற்றை விளக்கி தான் சென்ற காரியத்தை மிகச்சுலபமாக சாதித்துக்கொள்வார். அந்த மனோபக்குவம் யாருக்கும் எழிதில் கிடைக்காது. எனவே இவரின் இழப்பு எமது சமுதாயத்திற்கு ஒரு பேரிழப்பாகும்.

இப்பேர்ப்பட்ட ஒரு சமூகசேவகனை, குடும்பத் தலைவனை இழந்துநிற்கும் அவரின் குடும்பத்தவரின் துயரில் நானும் பங்குகொண்டு துயர் அடைவதோடு அமரரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

இப்படிக்கு
*என்றும் மக்கள் சேவையிலுள்ள*
**சி.சிவனேசன்**
நாடாளுமன்ற உறுப்பினர், யாழ் தேர்தல் மாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## துருவ நட்சத்திரம் எங்கள் துரைசிங்கம்

**ஒருவன் எவ்வளவு காலம் வாழ்ந்தான் என்பது முக்கியமல்ல, எப்படி வாழ்ந்தான், தான் சார்ந்த சமூகத்திற்கு என்ன செய்தான், எதைச் சாதித்தான் என்பதைத்தான் நோக்கப்பட வேண்டும். உயிரோடு இருக்கும் பொழுது மட்டும் பேரோடும் புகழோடும் வாழ்ந்து இறந்த பின்னர் அவனை மக்கள் மறந்துவிடுகின்ற வாழ்வு அல்லாமல், மண்ணை விட்டுப் பிரிந்த பின்பும் மக்கள் மனங்களில் நிலைத்து இருப்பவன்தான் உண்மையான மனிதன். அத்தகைய பெருமைக்கு உரியவர் எங்கள் கிராமத்தின் கொடுமுடியாக திகழ்ந்து அமரத்துவம் அடைந்த அமரர் துரைசிங்கம் அவர்கள். ஒருவர் இல்லாதபோதுதான் அவரின் அருமை மற்றவருக்கு தெரியவரும். அந்த அளவிற்கு எமது வல்வெட்டிக் கிராமம் எங்கள் மேலான அண்ணலை இழந்து பரிதவிக்கின்றது.**

எங்கள் தர்மகுலசிங்க சனசமூக நிலையத்தின் துருவ நட்சத்திரம் இன்று நம்மை விட்டுப் பிரிந்து சென்று விட்டது. அவரது கனவுகள் எல்லாம் எமது சமூகத்தைப் பற்றியதே. அமரர் தமது குடும்பத்தைவிட எம் சமூகத்தையும், கிராமத்தையுமே தனது இளவயதிலிருந்து நேசித்தவர். எமது கிராமத்தின் தர்மகுலசிங்க சனசமூகநிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம், பாலர்பாடசாலை, ஐக்கிய நாணயசங்கம் என்ற ஒவ்வொரு தூண்களும் அமரரின் முகத்தையே காட்டுகின்ற படிமங்களாக திகழ்கின்றன. அமரர் நிறுவிய அத்தனை அமைப்புக்களும் இன்றுவரை சிறப்பாக இயங்கி வருகின்றன.

என்னைப் போன்றவர்களை எல்லாம் இளம்பராயத்தில் தன்னுடன் அரவணைத்து சமூக உணர்வினை ஊட்டி சமூகத்திற்கு சேவையாற்ற வழிகாட்டிய உத்தமன்.

கல்வியில் உயர்ந்து தம்மை கல்விமான் என்று இறுமாப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைந்தவர்கள் கூட சாதிக்க முடியாத எத்தனையோ விடயங்களை எங்கள் மக்களின் தலைவனாக சவால் விட்டு சாதனை படைத்த கருமவீரன் எங்கள் அமரர் துரைசிங்கம். இருக்க நிலமின்றி வாழ்ந்த மக்களுக்கு நொாங்கியோடை, பைங்கூரன் போன்ற குடியேற்றத் திட்டங்கள் மூலம் நிலத்தைப் பெற்றுக் கொடுத்து நிலைத்த வாழ்வை நிலைநாட்டிச் சென்றுள்ள உத்தமரை அந்த மக்கள் வாழ்நாளில் என்றுமே மறக்க மாட்டார்.

சமூகவியலாளனாக அமரர் அவர்கள் தன் உறவுகள் பலரை கல்வியில் உயர்த்தி சிறந்த பதவிகளில் இருத்திய பெருமைக்குரியவர். அவர் எந்த ஒரு செயலில் ஈடுபட்டாலும் நிச்சயம் அதில் ஆழமான அர்த்தம் இருக்கும். அவை எல்லாம் நமக்கு நல்ல படிப்பினையாக அமைந்தன. நல்ல சீர்பெறு இல்லாளுடன் இல்லற வாழ்வில் இணைந்து சிறந்த குலமக்களைப் பெற்று சீராளனாக வாழ்ந்தவர். கொடிய நோயின் தாக்கத்திற்கு உள்ளானது எமையெல்லாம் கலங்க வைத்தது.

அண்ணலுக்கு நாம் செய்ய வேண்டியது அளவிட முடியாது. ஆனால் அர்த்தமுள்ள முறையில் அவர்களுக்கு பாராட்டுவிழா ஒன்று எடுக்க எங்கள் நிர்வாகம் மனம் விரும்பி ஆயத்தங்கள் செய்தது. ஆனால் காலதேவன் தனது கைத்திறனால் எங்கள் தலைவனை கவர்ந்து சென்றுவிட்டான். அதிர்ச்சி அடைந்தோம். இன்றும் அந்த அதிர்ச்சியிலிருந்து நாம் விடுபடவே இல்லை. அவரது பிற்கால சமூகக் கனவுகளை நாம் நிறைவேற்றுவோம். அவர் என்றும் எங்களுடனேயே வாழ்கிறார். செத்தும் கொடை கொடுத்த சீதக்காதியாக விடைபெற்றுச் சென்ற எங்கள் அண்ணலின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!



திரு.கி.இராஜதுரை
*தலைவர்,*
தர்மகுலசிங்க ச.ச.நிலையம்,
வல்வெட்டி.

60வது பிறந்தநாளின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## எதற்கும் அஞ்சாத சமூகப் போராளி

**ஒரு மனிதன் எவ்வளவு காலம் வாழ்கின்றான் என்பதனை கணக்கிட்டுப் பார்ப்பதை விடுத்து அவன் மனித சமூகத்திற்கு செய்து கொண்ட சேவைகள் அவன் என்றும் மக்கள் மனதில் பதிய வைக்கும். இந்த வகையில் அண்மையில் அமரத்துவம் எய்திய கோபால் துரைசிங்கம் J.P அவர்களின் வாழ்வும் மக்கள் மனதில் எனறும் நிலைத்திருக்கும்.**

கம்பர்மலையை சேர்ந்த தோழர்கள் J.குகதாஸ், R.ஜெயகுணரத்தினம் ஆகியோர் மூலம் தோழர் துரைசிங்கம் அவர்களை முதன் முதலில் அறிந்து கொண்டேன். அன்றுமுதல் அன்னார் எனது தோழராகவும் நல்ல நண்பராகவும் இருந்து வந்துள்ளார். உடுப்பிட்டிக்கு வரும்போதெல்லாம் நான் தோழரின் "மோகன் இல்லம்" சென்று அவருடன் உரையாடத் தவறுவதில்லை. அப்பொழுதெல்லாம் அவர் எமது மக்களின் சமூக ஒடுக்குமுறை பற்றியும் அவற்றிலிருந்து மக்களை எவ்வாறு விடுவிக்கலாம் என்பது பற்றியும் தனது கருத்தைக் கூறத் தவறியதில்லை.

ஒடுக்கப்பட்ட மக்களின் விமோசனத்திற்காக சாதிக் கொடுமைகளை ஒழிப்பதற்காக தீண்டாமை கொடுமையிலிருந்து எம்மக்களை விடுவிப்பதற்கான போராட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சி சிறுபான்மைத் தமிழர் மகாசபை ஆகியவற்றுடன் இணைந்து போராடவும் அவர்பின் நிற்கவில்லை. தோழர் மு.கார்த்திகேசனை யாழ் நகர் அமைப்பாளராக நியமித்த கட்சி தோழர் M.C.சுப்பிரமணியத்தை வடமராட்சி அமைப்பாளராக்கியது. இதன் பயனாக தோழர் துரைசிங்கம் M.C.யுடன் இணைந்து கட்சியையும் மகாசபையையும் உடுப்பிட்டிப் பிரதேசத்தில் ஒரு பலம்மிக்க சக்தியாக வளர்த்ததில் அன்னாரும் ஒருவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் துரைசிங்கம் தனது ஆரம்பகாலத்தில் இலங்கையின் இடது சாரிக்கட்சிகளில் ஒன்றான ல.ச.ச கட்சியின் வடபிரதேச தலைவர்களில் ஒருவராகிய தோழர் C.தர்மகுலசிங்கம் (ஜெயம்) அவர்களின் ஆதரவாளராக இருந்தார். அதற்குப் பிற்பாடு தன்னை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியில் இணைத்துக் கொண்டதுடன் 1956ல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தோழர் பொன்.கந்தையாவின் வெற்றிக்காக உழைத்த ஒரு பெருந்தகை. அமரர் துரைசிங்கம் உடுப்பிட்டி கிராமசபை உறுப்பினராகவும் உடுப்பிட்டி பல நோ.கூ.சங்க இயக்குனராகவும் இருந்து தனது கிராமத்தின் வளர்ச்சிக்கும் அம்மக்களின் தேவைகளை உணர்ந்து சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு அவற்றினை உரிய காலங்களில் நிறைவேற்றி வந்த ஒரு தொண்டன் ஆவார். அரசியல், சமூகம் ஆகியவற்றின் வளர்ச்சிக்காக எவ்வாறு உழைத்தாரோ அவ்வாறே தனது குடும்ப வளர்ச்சியிலும் கூடிய கவனத்தை ஈர்க்கத் தவறவில்லை. அமரரின் மனைவி சோதியம்மா அவர்கள் பல வருடங்களாக கொடிய நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். அந்நோயிலிருந்த தனது மனைவியை குணப்படுத்துவதற்காக எவ்வளவோ முயற்சி செய்தார். இலங்கையின் பிரபலமான டாக்ரர்கள் பலரிடம் காண்பித்து சிகிச்சை பெற்று வந்தார். ஒரு வருடம் இருவருடம் அல்ல. பல வருடங்களாக மனைவியைக் குணப்படுத்துவதற்காக போராடினார். இந்த நிலையிலும் தன் மனைவிமேல் வெறுப்போ அல்லது மனச்சோர்வோ இன்றி மனைவியின் உயிர் பிரியும்வரை உண்மையான ஒரு துணைவனாக தன்னை நிலைநிறுத்தியமையை வேறு யாராலும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது.

மரணங்கள் மலிந்து விட்ட இன்றைய நாட்களில் அன்னாரின் இழப்பு எமக்கு வேதனையைக் கொடுத்தாலும் இன்று பலருக்கு ஏற்படும் அகாலமரணம் போன்று அல்லாது அது இயற்கையாக அமைந்தமை எம்மவர் மனதை சற்று ஆறுதலடையச் செய்கிறது.

இறுதியாக கவிஞர் எழில்வேந்தனின் கவிதையின் ஒரு பகுதியை அன்னாருக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

" ஊருக்குள்ளே சாதியில்லை
ஒப்புக் கொள்ளலாம் - அது
உள்ளத்திலே ஒழிந்திருக்கே
என்ன பண்ணலாம்"

வதிரி. S.K.இராசேந்திரன் J.P



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஏழைகளின் தோழன்

காலஞ்சென்ற அமரர் கோபால் துரைசிங்கம் அண்ணன் அவர்களை நினைக்கும்போது அவரது கவர்ச்சியான எடுப்பான தோற்றமும் வசீகரமான புன்சிரிப்பும் தான் எம் கண்முன்னால் வந்து நிற்கும். அவரின் புன்சிரிப்பு எதிரியையும் வசப்படுத்தும். அவர் தற்போது எம்மத்தியில் இருந்து மறைந்து விட்டார் என நினைக்கும்போது மிகவும் வேதனையாக உள்ளது. எனது சிறுபராயம் தொட்டே அவருடன் பழகும் வாய்ப்பு கிடைத்தது. சிறியவர் பெரியவர், ஏழை பணக்காரர், படித்தவர் படியாதவர் என்ற வேறுபாடின்றி சகலருடனும் அன்புடன் பழகியவர். இவரது இப்பண்பு எனக்கு இவர்மேல் பெருமதிப்பினை ஏற்படுத்தியது. சமூக அநீதிகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்து அதற்காக ஓங்கி குரல் கொடுத்தவர். சமூக நீதிக்காக போராடியவர். அதில் வெற்றியும் கண்டவர். சொல்லிலும் செயலிலும் உறுதியாக நின்றவர். எமது மக்களின் உயர்வுக்காக தன்வாழ்நாளின் பெரும்பகுதியை அர்ப்பணித்துச் செயற்பட்டவர். தனது குடும்பத்தின் உயர்ச்சியை புறந்தள்ளி பலகாலம் மற்றவர்களின் மேன்மைக்காக விடிவுக்காக ஓயாது உழைத்தவர். காணியற்ற வறிய மக்களுக்கு காணிபெற்று கொடுத்தும் பலருக்கு வேலைவாய்ப்புகள் பெற்றுக் கொடுத்தும் மற்றவர் வாழ்வில் ஒளியேற்றியவர். தர்மகுலசிங்கம் சனசமூக நிலையம், வல்வெட்டி மேற்கு கிராமமுன்னேற்றச் சங்கம், தர்மகுலசிங்கம் சிக்கன கடன் சங்கம், குணசேகரா விளையாட்டுக்கழகம், உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்க கிளை 24 கிளைக்குழு ஆகியவற்றின் தலைமைப் பொறுப்பேற்று சமூக, பொருளாதார, கல்வி, கலை, கலாச்சார, விளையாட்டுத்துறைகளின் வளர்ச்சிக்காக திறம்பட செயலாற்றியவர். எமது மக்களின் உயர்வுக்காகவும், விடிவுக்காகவும் உழைத்த விரல்விட்டு எண்ணக் கூடிய முன்னோடிகளில் ஒருவரான இவர் சிறந்த ஆர்மோனியக் கலைஞராகவும் திகழ்ந்தவர். இது பலருக்கு தெரியாது. இவரது இழப்பு எமது கிராமத்திற்கும் எமது மக்களுக்கும் பேரிழப்பாகும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரது பேரிழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

தம்பு நேத்திரானந்தம்,
கிராம உத்தியோகத்தர்,
வல்வெட்டி, வல்வெட்டி மத்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசத்தின் துணைவன்

அமரர் கோபால் துரைசிங்கம் JP அவர்களுடன் நான் நீண்ட காலத் தொடர்பு கொண்டு அவரின் பல செயற்பாட்டிற்கு உறுதுணையாக இருந்துள்ளேன். இவரிடத்தில் நான் கண்ட பல அம்சங்களில் எனக்குப் பிடித்தது இவரின் துணிவும், எடுத்த காரியத்தை நிறைவேற்றுவதில் உள்ள துடிப்புமாகும்.

அமரர் அவர்களுடன் பழகிய வகையில் பலசம்பவங்களை எடுத்துக் கூறலாம். அவையாவும் நினைவுபடுத்தப்பட வேண்டியதாகும். அவற்றில் ஒரு சில சம்பவங்களை கூறலாம் என நினைக்கின்றேன்.

பல அரசியல்வாதிகள் அரச அதிகாரிகள், சங்கத் தலைவர்கள் போன்றோரிடம் மக்களின் தேவைகருதி எம்மையும் கூட்டிச் செல்வார். அங்கு சென்றதும் தன்னை அறிமுகம் செய்யும் போது நான் இன்ன சாதியைச் சேர்ந்தவன் என்றே தொடங்குவார். அவர்கள் அவரை ஆச்சரியத்துடன் நோக்கி விடயத்தை அணுகுவர். அவர்கள் கூறாமலே அவர்கள் முன்னிலையில் ஆசனம் இருந்தால் இருந்து விடுவார். இத்துணிவு கடந்த காலச்சூழ்நிலையில் எமக்கு வருமா? அப்படி அவர் நடந்தாலும் அவர் வைக்கும் வேண்டுகோளை அவர்கள் நிராகரித்தால் அவர்கள் முன்னிலையிலேயே கூறுவார் "உங்களால் முடியாவிட்டால் நான் மந்திரிவரை செல்வேன் என்பார்" இதனை செயலிலும் பல சந்தர்ப்பங்களில் நடைமுறைப்படுத்தி வெற்றியும் கண்டுள்ளார்.

எமது கிராமத்திற்கு மக்கள் பங்கீட்டுப் பொருட்களை பெற ஒரு கூட்டுறவுக்கடை இல்லாதது நீண்டகால குறைபாடாக இருந்தது. 1972ம் ஆண்டு அமரர் K.T.இராஜசிங்கத்துடன் தொடர்பு ஏற்படுத்தி தான் சார்ந்த சமூக மக்களுக்கு பல உதவிகளைப் பெற்றுக் கொடுத்து வந்தார். நானும் எமது கிராம தேவைகளை எடுத்துக் கூறினேன். என்னையும் அழைத்துச் சென்று கதைத்தார். கேட்கப்பட்ட ஆவணங்கள் தயாரிப்பதில் காலதாமதங்கள் ஏற்படும் வேளையில் என்னைத் தேடிவந்து ஏசுவார். ஆவரின் வேகத்திற்கு ஈடுகொடுத்து செயற்பட்டேன். இவரின் முயற்சியால் நாவலடி 18ம் கிளை உருவாகியது. கிளை உருவாகியது மட்டுமல்ல இருவருக்கு உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கத்தில் கிளைமுகாமையாளர் பதவியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுத்தந்தார். இக்கிளை இருக்கும்வரை அமரரின் நாமம் எமது கிராமத்தில் நிலைத்து நிற்கும் என்பதில் சந்தேகமில்லை.

அமரர் அவர்களோடு உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கத்தில் இயக்குனர் சபை உறுப்பினராக இருந்துள்ளேன். சமூக ரீதியாக மூவர் இடம்பெற்ற காலத்தில் மண்டானைச் சேர்ந்த திரு.வ.சின்னத்தம்பி ஆசிரியரும் ஒருவராவார். அமரரும் சின்னத்தம்பி ஆசிரியரும் ஒன்று சேர்ந்து செயற்பட்டால் அங்கு எமது சமூக நலன்களே கூடுதல் கவனமாக இருந்தது. சங்கத்தில் மூட்டை அடிக்கும் தொழிலாளர்களுக்கு புறம்போக்கான நடைமுறைகள் காணப்பட்டது. அதனை முறியடிப்பதற்கு இயக்குனர்சபைக் கூட்டத்தில் குரல் கொடுக்கும்போது தலைவரோ, பொதுமுகாமையாளரோ தத்தளிப்பார்கள். பின்னர் இவரின் வேண்டுகோள் நிறைவேறியே தீரும். நான் என்ன எந்த நேரமும் சாதி சாதி என்கின்றார்களே என எனக்குள் நினைத்து எரிச்சல் அடைவேன். அதனால் ஏற்பட்ட மாற்றத்தால் எம்மவர்கள் சமநிலையில் நடத்த வழிகோரியது என்பதை நினைக்கும் பொழுது சந்தோசமடைகின்றேன். மூவர் இயக்குனராக இருந்து அட்டகாசம் செய்கிறார்கள். இவர்களுக்கு சந்தர்ப்பங் கொடுக்கக்கூடாது எனப் பேரம்பேசி இருவராக்க முயற்சித்தார்கள். எமது மக்கள் ஏற்கக் கூடாது என உ.ப.நோ.கூ.ச பொதுச்சபையில் அங்கம்பெறும் எம்மவர்கள் திரு.க.அப்புக்குட்டி J.P தலைமையில் கூடி மூவர்தர வேண்டுமென்ற போராட்டத்தை மேற்கொண்டவேளை அமரர் முழுநேரமாக செயற்பட்டவர்களில் ஒருவராக திகழ்ந்து வெற்றியையும் பெற்றுத் தந்தார். இறுதிவரை சமூகமே மூச்சாகவே வாழ்ந்தவராவார்.

அமரர் அவர்களோடு பழகியதால் அவரின் நடத்தையில் நான் கற்றுக் கொண்ட விடயங்கள் பல. அவற்றில் பொருத்தமானவற்றை கடைப்பிடித்து செயற்பட்டு வருகின்றேன்.

பூமியில் ஜனனமானோர் என்றோ ஒருநாள் மரணம் அடைவது நிச்சயம். அமரர் அவர்கள் வாழ்க்கை அனுபவிக்க வேண்டிய இன்ப துன்பங்கள் என்பவற்றையும் பிள்ளைகளின் பேரப்பிள்ளைகளின் சீரும் சிறப்பையும் கண்டு வயது முதிர்வின் காரணமாக காலமாகிவிட்டார். இது காலத்தின் கட்டளை என்பதை ஏற்று ஆறுதல் அடைவோமாக.

நாவலடி
உடுப்பிட்டி.

கொ.குணசிங்கம ஜே.பி
(ஆசிரிய ஆலோசகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கூட்டுறவில் துரைசிங்கம் (ஜே.பி)

1971 தொடக்கம் 1990 வரை காலப்பகுதியில் உடுப்பிட்டிப் ப.நோ.கூ. சங்கத்திற்கு இவர் ஆற்றிய சேவை மகத்தானது. பொதுவாக உடுப்பிட்டி வாழ் மகக்ளுக்கும் வல்வெட்டி மேற்கு மக்களுக்கும் பொருட்கள் தட்டுப்பாடான காலகட்டத்தில் என்னுடன் தோளோடு தோள் நின்று பொருட்களை வரவழைத்து பங்கீடு செய்ய உதவியவர். புல ஆண்டுகளாக வல்வெட்டி மேற்கு கிளையில் தலைவராகவும் இருந்தவர். J.P பொதுச்சபைக் கூட்டத்திற்கு வரும்போது கம்பீரமாக வெள்ளை சேட்டும் வெள்ளை வேட்டியும் அணிந்து வந்து கூட்டத்தில் பொதுஉடமை கொள்கைகளை மையமாக வைத்து வாதிடும் வன்மையுடைத்தவர். பேசுவதற்கும் கேள்விகள் கேட்பதற்கும் மிகவும் வல்லவராக இருந்தவர். நெறியாளர்சபை உறுப்பினராகவும் இருந்தவர். சங்க வளர்ச்சியில் அக்கறையாக இருந்து செயற்பட்டவர். மிகுந்த சுறுசுறுப்பும் கூட்டுறவுக்கு உதவும் பண்பும் கொண்ட இவர் 09.01.2007ல் காலமான செய்தி கேட்டு கவலை அடைந்தேன். எல்லோருக்கும் உரியது பிறப்பும் இறப்பும். இவரது இழப்பினால் துயரடைந்திருக்கும் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நன்றி.

சி.கணபதிப்பிள்ளை
தலைவர் (முன்னாள்)
உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம்



பொது நிகழ்வொன்றில்
உரையாற்றுகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மறுமலர்ச்சியின் முதற்குழந்தை
# கோபால் துரைசிங்கம்

மக்கள் எழுச்சி என்பது எந்த வகையான ஒரு தூண்டுதலுமின்றி இயல்பாகத்தானே தோன்றிவிடுவதில்லை. குறித்த ஒருபகுதி மக்கள் மத்தியில் அந்த எழுச்சி உருவாவதற்கு உந்து சக்தியாக நிச்சயம் அந்த மக்கள் மத்தியிலேயே ஒரு சிலர் இருந்திருப்பார்கள். ஒடுக்கப்பட்ட எமது சமூக மக்களின் கடந்தகால வரலாறும் இதுவாகவே இருந்து வந்திருக்கின்றது. எமது சமூக மக்களின் எழுச்சிக்கு மூலவர்களாக இருந்த ஒரு சிலர் தாம் சார்ந்த சமூகமட்டத்திற்கு வெளியிலான ஊடாட்டம் அந்த ஊடாட்டத்தின் பேறாகப் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் என்பன அவர்கள் உள்ளங்களில் எழுச்சிக்கான வித்தை விதைத்து விட்டிருக்கின்றன.

வல்வெட்டிப் பகுதியில் வாழ்ந்து வரும் எங்கள் சமூக மக்கள் மத்தியில் எழுச்சியைத் தோற்றுவித்தவர்களுள் மிகமுக்கியமான ஒருவராகக் கொள்ளத் தகுந்தவர் துரைசிங்கத்தின் தந்தை கோபால் அவர்கள். அவர் றோட்டுக் கொந்துறாத்துக்காரராக இருந்தார் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய பிரதானமான ஓர் அம்சம். தொழில்சார்ந்த தொடர்புகள் காரணமாக அவரது ஊடாட்டங்களும் அதன் வழியான அனுபவங்களும் அக்காலத்தில் வாழ்ந்த எங்கள் சமூகமக்களில் இருந்து வேறுபட்டதாகவும் விரிவுபட்டதாகவும் இருந்து வந்திருக்கிறது. அவர் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் ஏனைய சமூகங்களின் வளர்ச்சிப் போக்கினையும் கூர்ந்து நோக்கும் வண்ணம் தூண்டி விட்டிருக்கின்றன. அந்தத் தூண்டுதலினால் அவரிடத்தில் உருவான மனஎழுச்சியினை மேலும் சுடரச் செய்கின்றவர்களாக வடமராட்சி சமூகசேவா சங்கத்தினர் இருந்து வந்திருக்கின்றார்கள்.

வடமராட்சி சமூகசேவா சங்கம் கரவெட்டி த.இரத்தினம் ஆசிரியர் முன்னின்று தேவரையாளி சைவவித்தியாசாலை (இன்றைனய தேவரையாளி இந்துக் கல்லூரி) ஆசிரியர்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறுசிலரையும் ஒன்றிணைத்து எங்கள் சமூக மக்களின் முன்னேற்றத்தினைக் கருத்தில் கொண்டு 18.04.1940இல் உருவாக்கப் பெற்ற ஒரு சமூகத் தாபனம். அந்தத் தாபனம் எங்கள் சமூக மக்களிடத்தில் விழிப்புணர்வினை ஊட்டும் நோக்கத்துடன் கிராமங்கள் தோறும் பிரசாரக் கூட்டங்களை இக்காலத்தில் நடத்தி வந்தது. அத்தகைய பிரசாரக் கூட்டமொன்று 1943 நவம்பர் மாதம் உடுப்பிட்டியில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கான ஏற்பாட்டினை துரைசிங்கத்தின் தந்தையார் கோபால் அவர்களும் உடுப்பிட்டியைச் சேர்ந்த சிலரும் முன்முயற்சி எடுத்துச் செய்தார்கள்.

எங்கள் சமூகப் பிள்ளைகள் ஆங்கிலக் கல்வியைப் பெற்றுக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஆங்கிலப் பாடசாலைகளில் மாணவர்களுக்கான அனுமதியைப் பெற்றுத்தரலாம். எனத்தெரிவித்து பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைத் துணிந்து அனுப்பி வைக்க வேண்டுமெனச் சங்கத்தினர் கோரி நின்றனர். அப்பொழுது உடுப்பிட்டி அ.மி.தமிழ்ப் பாடசாலையில் எங்கள் சமூகத்து மாணவர்கள் மிகச் சிலரே ஆரம்பக் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் ஆங்கிலப் பாடசாலையில் அந்த அனுமதி வழங்கப்படாத நிலை தொடர்ந்து இருந்து வந்தது.

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியில் வதிரியைச் சேர்ந்த எங்கள் சமூகத்து கிறிஸ்தவர்களின் மாணவர்கள் இரண்டொருவர் அக்காலத்தில் அனுமதிக்கப்பெற்று கல்வி கற்று வந்தார்கள். இந்துக்களான எங்கள் சமூக மாணவர்களை சைவர் ஆங்கிலப் பாடசாலைகள் உள்ளே அனுமதிக்கத் தயாராக இருக்கவில்லை. கிறிஸ்தவ ஆங்கிலப் பாடசாலைகளின் நிலைமையிலும் மாற்றம் எதுவும் பெரிதாக இருக்கவில்லை. மதந்தான் கிறிஸ்தவமாக மாறியிருந்ததேயன்றி மனப்பாங்கில் மனதில் உயர்சாதிக்காரர்களாக வேரூன்றி நிலைத்து நின்றார்கள். கிறிஸ்தவர்களாக மதம்மாறிய எங்கள் சமூகத்தவர்கள் வழிவந்த சிறுநெகிழ்ச்சி காரணமாக ஜோன்சண்முகம் உபாத்தியார் இந்துக்களான ஸி.திரவியம் (தேவரையாளி இந்துக் கல்லூரி முன்னாள் உப அதிபர்) அவரது ஒன்றுவிட்ட சகோதரன் ஆகிய இருவரையும் 1943இல் ஹாட்லிக் கல்லூரியில் முதன்முதலாக மாணவர்களாகச் சேர்த்துவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய ஒரு காலகட்டத்தில் வடமராட்சி சேவாசங்கம் உடுப்பிட்டியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் விடுத்த வேண்டுகோளை அச்சங்காரணமாக ஏற்றுக் கொள்ளுவதற்குப் பலர் முன்வந்தார்கள் என்று சொல்வதற்கில்லை. ஆனால் துரைசிங்கத்தின் தந்தையார் கோபால் அவர்களும் இன்னும் மூவரும்தான் தங்கள் பிள்ளைகளை ஆங்கிலப் பாடசாலைக்கு அனுப்பி வைக்கத் தயாரென முன்வந்தார்கள்.

உடுப்பிட்டி அ.மி. ஆங்கிலப் பாடசாலை அதிபராக அப்பொழுது இருந்து வந்தவர் இந்தியரான (மலையாளி) கே.ரி.ஜோன் அவர்கள். எங்கள் சமூகத்தின் மீது அனுதாபமுடையவராக இருந்த அவரையும், கிறிஸ்தவ மதப் போதகர்களையும், பாடசாலை முகாமையாளரையும் சமூகசேவா சங்கத்தினர் கண்டுபேசி, ஒருவாறு ஒருப்படவைத்து எங்கள் சமூகப் பிள்ளைகளுக்கான அனுமதியைப் பெற்றுக் கொடுத்தார்கள். அப்பொழுது கோபால் துரைசிங்கம் அவர்களும் வேறு இருவரும் ஆங்கிலப் பாடசாலையில் 1944 ஜனவரியில் மாணவர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

இந்தச் சம்பவம் எங்கள் சமூக மக்களின் கல்வித்துறைசார்ந்த முன்னேற்றம் மாத்திரமல்லாது சாதியத்தின் தளையினை அறுத்து ஓரடி முன்னெடுத்து வைத்த சமூக மறுமலர்ச்சி இதுவென்று கொள்ளுதல் வேண்டும். அந்த மறுமலர்ச்சி பெற்றெடுத்த முதற் குழந்தைதான் கோபால் துரைசிங்கம் அவர்கள். அவர்தான் நடந்து வந்த பாதையினை மறந்துவிடாது தனது சமூகத்தின் வளர்ச்சியில் பங்காளியாக, அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையுடன் இணைந்து நின்று செயற்பட்டார். துரைசிங்கம் அவர்கள் மிகுந்த துணிச்சலுடன் காரியம் ஆற்றும் இயல்புடைய ஒருவர். எந்தப் பெரிய உயர்அதிகாரியாக இருப்பினும், அவரைச் சந்தித்து நியாயத்துக்காகப் போராடும் நிமிர்ந்த குணம் அவரிடத்தில் இருந்து வந்திருக்கின்றது. எந்தவொரு விடயத்தினையும் விட்டுக் கொடுக்காது விவாதிக்கும் ஆற்றலுள்ளவராக அவர் விளங்கினார்.

தனது கருத்தினை எச்சந்தர்ப்பத்திலும் விட்டுக் கொடுக்காத ஒருவரை உயர்ந்த நிலையில் வைத்து தளப்பமில்லாத சிறந்த கொள்கைவாதி எனக் குறிப்பிடுவார்கள். இதனை வேறுவிதமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலினப்படுத்திப் பேசுகின்றவர்கள் 'விடாக்கண்டன்' எனக் கூறும் வேடிக்கையும் நிகழ்வதுண்டு. துரைசிங்கம் அவர்கள் தனது கருத்து நிலையில் இருந்து எத்தகைய சந்தர்ப்பத்திலும் விட்டுக் கொடுக்காது வாழ்ந்த ஒரு மனிதன். ஜனநாயகம் என்பது சிறந்த கோட்பாடு மாத்திரமல்ல. அது ஒரு நொண்டிக் குதிரையுந்தான். அந்த நொண்டிக் குதிரைக்கு எதிராகப் பல சந்தர்ப்பங்களில் தனித்து நின்று தீரத்துடன் போராடி வந்தவர் துரைசிங்கம் அவர்கள்.

எங்கள் சமூக மக்களின் - குறிப்பாக வல்வெட்டிப் பகுதி மக்களின் வரலாற்றில் கோபால் துரைசிங்கம் அவர்களுக்கு யாராலும் நிராகரிக்க இயலாத ஓர் இடமுண்டு. இராமர் அணைகட்டும்போது அணில் ஒன்று சிறிய கல்துணிக்கை ஒன்றினைத் தனது வாயினால் கவ்வி அந்த அணையில் போட்டு, கம்ப காவியத்தில் என்றுமே அழியாத ஓர் இடத்தினைப் பிடித்துக் கொண்டுள்ளதல்லவா? அதேசமயம் சமூகத்தில் பற்பல காரியங்களைச் செய்து முடித்த கோபால் துரைசிங்கம் அவர்களின் பெயரும் வரலாற்றில் பேசப்படும், அது அழியாது, வரலாறு அழியாது வாழும்வரை.

– தெணியான்.



சமாதான நீதவான் பதவி பெற்றபோது
ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிப் பிரமுகர்
கே.ரி.இராஜசிங்கத்துடன்



உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்க
பொது நிகழ்வின்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கோபால் துரைசிங்கம் JPயின் சாதனை.

எமது கிராமத்தின் வாசலில் அமரரின் மோகன் இல்லம் அமைந்துள்ளது. வல்வெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டாலும் இலகடி என்னும் எமது கிராமத்தையும் நேசித்தார்.

இலகடி மக்களுக்கு சரியான பாதை இல்லை. போதிய கிணறுகள் இல்லை. இவற்றின் மேலாக குடியிருக்க காணியில்லை. இவை பெரும் குறைபாடாக இவருக்குத் தென்பட்டது. நாம் அக்கறை கொள்ளாவிட்டாலும் காலம் சென்ற கு.தங்கவேலு, வெளிநாட்டில் உள்ள ஜெயக்கொடி, எம்மையும் அழைத்து மேற்படி தேவைகள் பற்றி கலந்துரையாடி எம்மை வழிநடத்துவார்.

எமது கிராமத்தில் உள்ள காணியில்லாதவர்களுக்கு காணி கிடைக்க வேண்டுமென்ற நோக்கில் காங்கேசன்துறையை சேர்ந்த வைரமுத்து ஆசிரியர் வீட்டிற்கு எத்தனையோ தடவை எம்மை அழைத்துச் சென்று எமது கிராம நிலைப்பாட்டை உறுதிப்படுத்தினார். தனது நோயான மனைவியைக் கூட விட்டுவிட்டு எம்மை கொழும்பு ஈறாக பலமுறை அழைத்துச் சென்று இலகடியில் காணி சுவாந்தர்களின் காணியை சுவீகரித்து எம்மக்களுக்கு குடியிருக்க காணி கிடைக்கச் செய்த பெருமை அமரரைச் சேர்ந்ததாகும்.

எம்மக்களுக்கு மின்சார வசதி, வீதி அமைப்புக்கள் போன்ற அபிவிருத்தி வேலைகளுக்கு வேண்டிய வழிகாட்டலை வழங்கி உதவினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் மறைவு எமது கிராம மக்களுக்கு பேரிழப்பாகும். ஆமரரின் பிரிவால் துன்புறும் குடும்பத்தாருக்கு கிராமமக்கள் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ம.தர்மலிங்கம்**
***இராசலிங்கம் ச.ச. நிலையம்***
**இலகடி, உடுப்பிட்டி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமூகநேசன் - துரைசிங்கம் அண்ணன்.

அண்மையில் காலமாகிய துரைசிங்கம் அண்ணன் அவர்களின் வாழுங்கால நிகழ்வுகளை ஒருமுறை திரும்பிப்பார்க்கின்ற பொழுது அவர் பற்றிய ஒரு சமூகக் கட்டுமான நிலைப்பாடுகள் எமது மனத்தில் தோன்றுவதனை எவரும் நிராகரிக்க முடியாது. ஆன்னார் எமது அடிமட்ட சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகளைக் கண்டு அந்த அடக்கு முறைகளையெல்லாம் அனுபவித்து அவற்றின் கொடூரங்களுக்கு முகங்கொடுத்து வாழ்ந்தவர். இந்தக் கொடூரங்களையெல்லாம் எதிர் கொண்டு நிலைநிற்பதற்கு எமது பிரதேசத்தில் தளமாய் அமைந்தவை அன்றைய இடதுசாரி முற்போக்கு முன்னணியான இலங்கைக் கம்யுனிஸ்ட் கட்சியும் தோழர் எம்.ஸி.சுப்பிரமணியம் அவர்களின் தலைமையிலான அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையும் ஆகும் என்பதனை எவரும் மறுக்க முடியாது. இவற்றினுடைய தொடர் நடவடிக்கையே இன்று நாம் அனுபவிக்கின்ற இன்றைய சமூக பொருளாதார அபிவிருத்தியின் பின்னணியிலான கல்வி, கலாசார மேம்பாடாகும்.

இன்றைய இளம் சந்ததியினருக்கு எமது சமூகத்தின் கொத்தடிமைத்தனத்தின் அடையாளங்களைத் தெரியாது. எமது சமூக மக்கள் காலம்காலமாக நிலச்சுவாந்தர்களின் காணிகளிலேயே குடில்கள் போட்டும் கொட்டில்கள் அமைத்தும் வாழ்ந்து வந்தனர். இதனால் கொத்தடிமைத்தன வாழ்க்கை எமது மக்களுக்கு நிர்ப்பதந்திக்கப்பட்டன. இதன் அடிப்படையிலேயே உயர்சாதி மக்களின் மரண நிகழ்வில் கட்டை குத்தி காவுதல், எமது சமூகப் பெண்கள் மாரடித்தல், உயர்சாதி மக்களின் தோட்டம், தொழுவம் ஆகிய பண்ணைகளில் வேதனமின்றிக் கூலி வேலைகள் செய்தல், மாட்டுத் தீவனத்துக்கு ஓலை வெட்டி கிழித்துக் கொடுத்தல், தொழிலாளர்களுக்கு சிரட்டையில் தேநீர், ஆலிலை, புவரசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலைகளில் உணவு பரிமாறுதல் போன்ற நடவடிக்கைகள் எமது மக்களின் தொன்று தொட்ட நிகழ்வுகளாகும். எமது அப்பு வேட்டி கட்டுவது முழங்காலுக்கு மேல், சால்வை தோளிலிராது, கமக்கட்டுக்குள் வைத்திருத்தல், எங்கள் ஆச்சி சட்டை போடாமல் மார்புக்குமேல் குறுக்குக் கட்டுகட்டி அல்லது தோள்க் கச்சை போட்டுத்தான் வீதியில் வருவார்கள். இவை எல்லாம் எமது சமூகத்தின் ஒரு காலகட்ட நடவடிக்கைகளாகும். இவைகள் இன்று இல்லை. இதைச் சிந்தித்துப் பார்ப்பதற்கு கூட இன்றைய தலைமுறைக்கு எந்தப் பதிவும் இல்லை. இவையெல்லாம் அவர்களுக்கு வாயைப்பிளக்கும் அபுர்வமாக இருக்கும். இப்படியான ஒரு சமூகக் கட்டுமானத்திலேதான் அமரர் கோபால் துரைசிங்கம் அவர்களும் பின்தங்கிய இந்தச் சமூகத்தின் உயர்வுக்காக தன்னை ஈடுபடுத்திக் கொண்டு இந்தக் கொடுமைகளையெல்லாம் நிர்மூலமாக்கி மானிட சமுதாயத்தின் மேன்மைக்காக குறிப்பாக இந்தச் சமூகத்தின் சமூக பொருளாதார சுதந்திரத்தினை முதன்மைப்படுத்தி போராடப் புறப்பட்ட பொதுவுடமைக் கட்சியுடனும் சிறுபான்மைத் தமிழர் மகாசபையுடனும் இரண்டறக் கலந்து கொண்டவர்களில் ஒருவராகத் தன்னை இணைத்துக் கொண்டு வாழ்ந்தவர்.

அமரர் அவர்கள் தனது இறுதி வாழ்க்கைவரைக்கும் சமூகத்தைப் பற்றிச் சிந்தித்து வாழ்ந்து வந்தார். வெளியில் நடமாடமுடியாத நிலையில்கூட தனது அத்தியந்த நண்பர்களைச் சந்தித்தால் எமது சமூக நிலைப்பாடுகள் பற்றியே பேசுவார். தனது கிராமம் சார்ந்த நிலையிலும், சமூகம் சார்ந்த நிலையிலும் பல்வேறு வெகுசன ஸ்தாபனங்களில் உறுப்பினராகவும், நிர்வாகங்களிலும் சேர்ந்து பல கடமைகளைச் செய்தவர். எனவே அமரர் அவர்களுடைய சேவைகள் எம்மத்தியில் கணிக்கப் பெற்றிருந்தன என்பதனை நினைவு கூர்ந்து அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

'ஆனந்த பவன்'
அல்வாய்.

**செ.சதானந்தன் JP**
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைத்ததை முடிப்பவன் கோபால் துரைசிங்கம் JP

இவர் ஒரு தூயமனம் படைத்தவர். நினைத்ததை செய்யும் வல்லமை படைத்தவர். நேர்மையானவர். இவர் சகல வெகுசன ஸ்தாபனங்களிலும் பங்கேற்பவர். கிராமசபை பலநோக்குக் கூட்டுறவு சங்கங்களிலும் தொடர்புடையவர். இவர் ஊருக்கு பெரும் தொண்டாற்றியவர். இவர் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

சி.செல்லையா (ஜே.பி)
துன்னாலை தெற்கு
கரவெட்டி.



தனது சகநண்பர்களுடன்



60வது பிறந்தநாளின்போது



## சமூக ஒடுக்குமுறைக்கு எதிர்ப்பாளன்

அமரர் கோபால் துரைசிங்கம் அவர்கள் எனது பாடசாலை நண்பரும் பாலிய நண்பருமாவார்.

அமரர் அவர்கள் பாடசாலைக்காலம் முதல் அவரது இறுதிக்காலம்வரை எமது சமூகத்தினரின் இன்பதுன்பங்களில் பெரும்பங்காளியாகச் செயற்பட்டவர்.

மேலும் அவரின் செயல்பாட்டில் நியாயமும் நீதியும் பொதிந்திருக்கும். அவற்றை நிலைநாட்டுவதற்காக எதையும் செய்வார். முடிவில் வெற்றியும் அடைவார்.

அமரர் அவர்கள் ஆரம்பக் கல்வியை கொற்றாவத்தை அமெரிக்கமிசன் பாடசாலையிலும் மேற்கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன்மிசன் கல்லூரியிலும் தொடர்ந்த காலங்களில் சமூக ஒடுக்குமைகளை எதிர்ப்பதில் தீவிரமாகச் செயற்பட்டவர்.

அன்றுதொட்டு இறுதிவரை தான் யார்? தன் சாதி என்ன? என்பதை முன்முழங்கியபின்புதான் தான் வந்த தேவைகளை அதிகாரிகளிடமும் பெரியவர்களிடமும் தெரிவிப்பார். அந்த ஒளிவின்மையான பேச்சும் குணமும் அவருக்கே உரித்தானவை.

மேலும் அவர் கைப்பந்தாட்டத்திலும் ஆர்மோனியம் வாசிப்பதிலும் சிறுநாடகங்கள் பழக்குவதிலும் பெரும் விற்பன்னர்.

நட்புக்கு முன்னுரிமை கொடுப்பவர். நயவஞ்சகத்துடன் பழகுபவர்களை அவர்களின் வஞ்சகத்தனத்தை வைத்தே வீழ்த்துவதிலும் அவருக்க நிகர் அவர்தான்.

அப்பேர்ப்பட்ட ஒரு சமூகத்தொண்டரை இழந்தது எமது சமூகத்திற்கு ஒரு சாபக்கேடாகும்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

"அமுதசுரபி", சமரவாகு.

**வே.அமிர்தலிங்கம்.**
(ஓய்வுபெற்ற அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்தமகள் குடும்பத்தினர்



மூத்தமகன் குடும்பத்தினர் (ஜேர்மன்)



இளைய மகன் குடும்பம் (நோர்வே)



இளைய மகள் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எம் சமூகத்தின் ஒரு சேவையாளன்

வல்வெட்டி தெற்கு நொங்கோடையைச் சேர்ந்த அமரர் கோ.துரைசிங்கம் எனது ஒரு பாலிய நண்பர். நான் அயல் கிராமமாகிய உடுப்பிட்டி கிழக்கு. அமரர் கொற்றாவத்தை அமெரிக்கன் மிஷன் தமிழ்ப் பாடசாலையில் தனது கல்வியை ஆரம்பித்தார். நான் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ்ப் பாடசாலையில் ஆரம்பித்தேன்.

இவரது தந்தை கோபால் P.W.D யில் றோட்டுக் கொந்தராத்துக்காரராக வேலை செய்தமையால் இவரது குடும்பம் அந்நாளில் செல்வாக்காக இருந்தது. அதனால் வாத்தியாராகவும் நாடக ஆசிரியருமான P.அண்ணாச்சாமி அவர்களின் நாடகங்களுக்கு ஆர்மோனியம் வாசிக்கும் சந்தர்ப்பத்தை அமரர் அவர்களுக்கு தந்தையார் ஏற்படுத்திக் கொடுத்தார். பாடும் திறனையும் கொண்டிருந்தமையால் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலய திருவிழா, காவடி ஆட்டம், ராமா நிகழ்வுகளின்போது பாடி ஆர்மோனியம் வாசிப்பதுண்டு. அச்சந்தர்ப்பங்களின்போதுதான் அவரை முதன்முதலில் அறியவந்தேன். குடும்பத்தில் மூத்தவராக இருந்தமையால் பெற்றோருக்குச் செல்லமாக இருந்திருக்கின்றார் போலும். அந்தவகையில் கழுத்தில் சங்கிலியும் கையில் சங்கிலியுமாகத்தான் காவடிச் சமா நிகழ்ச்சிகளில் தோற்றமளிப்பார்.

1943ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் எம்மக்களின் முன்னேற்றத்திற்காக வதிரியைச் சேர்ந்த எம் சமூகத்துப் படித்த ஒரு சில முன்னோடிகளால் ஆரம்பிக்கப்பட்ட வடமராட்சி சமூகசேவா சங்கத்தின் பிரசாரக் கூட்டம் ஒன்று எங்கள் பகுதியில் வைக்கப்பட்டது. அக்கூட்டத்தில் இதுகாலவரையும் எமது சமூகத்துப் பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்ளாத உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் ஆங்கிலப் பாடசாலையில் சேர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்திற்கமைய சங்கத்தவர்கள் அன்று பாடசாலை அதிபராய் இருந்த கே.ரி.ஜான் அவர்களைக் கண்டு கதைத்து சேர்ப்பதற்கான அனுமதியைப் பெற்றார்கள். 1944 ஜனவரியில் எம் சமூகத்து நால்வர் முதல்முதலாகச் சேர்ந்தோம். அவர்களுள் அமரர் துரைசிங்கமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர். மற்றவர்கள் கொற்றாவத்தையைச் சேர்ந்த வே.அமிர்தலிங்கம், இளகாமத்தைச் சேர்ந்த மா.மார்க்கண்டு, நான்காவதாள் நான். கூட்டத்தில் எடுத்த தீர்மானத்திற்கமைய நாங்கள் நாலுபேரும் நத்தார் லீவுக்குப்பின் பாடசாலை தொடங்கும்பொழுது முதல்நாளே போய்ச் சேர்வதென இருந்தது. ஆனால் வீட்டாரின், குறிப்பாக என் படிப்பைப் பொறுத்தவரையில் அக்கறை எடுத்த எனது மாமா பாடசாலையில் சேர்ப்பதென்பதை மறந்துவிட்டார்போலும். மற்றைய மூவரும் சேர்ந்துவிட்டார்கள் என்பதை பாடசாலையில் வேலை செய்து வந்தவரும் என் படிப்பில் அக்கறை காட்டியவரும் நான் பட்சத்துடன் நல்லத்தான் என அழைப்பவரும் எனக்குக் கூறித்தான் அது எனக்குத் தெரியவந்தது. எனவே ஒருகிழமை பிந்தித்தான் நான் பாடசாலையில் சேர்ந்து படிக்கத் தொடங்கினேன். நாங்கள் சேர்ந்ததைக் கேள்விப்பட்டு ஐந்தாவதாக வந்து சேர்ந்தவர் இமையாணனைச் சேர்ந்த அன்று ஈரக்கரை என அழைக்கப்பட்ட நமசிவாயம் ஆகும். 1949இல் ஆங்கிலக் கல்வியும் அரசாங்கத்தால் இலவசமாக்கப்பட்டதைத் தொடர்ந்து மேலும் எம் சமூகத்து மாணவர்கள் பலர் சேர்ந்து படிக்கத் தொடங்கினார்கள். இருந்தாலும் அன்று தீண்டாமைப் பேய் தாண்டவமாடியமையால் நாங்கள் வகுப்பில் பின் வாங்குகளில் பின்னுக்கே அமர்த்தப்பட்டோம். அத்துடன் பாடசாலைக் கிணற்றுத் தண்ணீர் குடிக்கமுடியாத நிலை இருந்தது.

பாடசாலையில் நாங்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டதைச் சகிக்கமுடியாத சாதித்திமிர் பிடித்த பேரினவாதிகள் நாம் படித்துவரும் வகுப்பு ஓரமாக இருந்த கிடுகு வேலிக்கும் கிடுகினால் வேயப்பட்ட வகுப்பு அறைக் கொட்டிலுக்கும் தீவைத்துக் கொழுத்தினர். அன்றைய பாடசாலை அதிபரை நாம் குறைகூறமுடியாது. அதிபர் ஒரு இந்தியநாட்டவர் என்றமுறையால் இவற்றையெல்லாம் சமாளித்து நடந்திருக்கின்றார். காரணம் ஆசிரியச் சூழலும் அயற் சூழலும். அயற்சூழல்தான் காரணம் என்றே கூறவேண்டும். ஆனால் இன்றோ மேற்படி உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் இவ்வேறுபாடுகள் எல்லாம் அகன்றுவிட்டன என அறியக்கிடக்கின்றது..

என்னைப்போல் அல்லாது அமரர் துரைசிங்கம் அவர்கள் வசதிபடைத்த குடும்பத்தில் பிறந்திருந்தும் அதைத் தனது நன்மைக்குப் பயன்படுத்தாது எமது சீரழிந்த, அடக்குமுறைக்குள் சிக்கிய சமுதாயத்தைச் சீர்படுத்துவதற்காகப் பயன்படுத்தினார். தனது முழுசேவைகளையும் எமது சமூக விடுதலைக்காகப் பாடுபட்ட ஒருவர் என்றே கூறவேண்டும்.

அதனால் அவரது அயராத முயற்சிகள் அவருக்குப் பல வெற்றிகளைத் தந்துள்ளன. இதன் பிரதிபலிப்பே வல்வெட்டி நொங்கியோடையில் ஓங்கிவளர்ந்துநிற்கும் தர்மகுலசிங்கம் சனசமூக நிலையமும் அவரின் சமூகசேவையைக் கருதி அரசாங்கமும் அவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரவப்படுத்தி சமாதானநீதவான் பட்டமுமாகும். அவர் அரசியலில் பெரிதாக நாட்டம் செலுத்தவில்லை. ஆனால் அரசியல்வாதிகளைக் கொண்டு தமது சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றும் ஒரு சாணக்கியனாக விளங்கினார்.

யார் தேர்தலில் நின்றாலும் வல்வெட்டிப் பிரிவிலும்சரி எமது சமூகத்தவரிடையே என்றாலும்சரி கோபால் துரைசிங்கம் வீட்டில் வேட்பாளர்கள் சமூகமளித்து அவரின் ஆதரவைக் கோருவது வளக்கம். காரணம் எமது சமூகத்திற்கே அவர் ஒரு தேர்தலில் நிற்காத எம்.பியாக இருந்ததே.

அவரது சாணக்கியத்தின் ஆரம்ப எல்லையாக எமது சமூக முன்னேற்றத்திற்கும் விடுதலைக்கும் போராடிய இலங்கைச் சமசமாசக் கட்சியில் போட்டியிட்ட அமரர் தர்மகுலசிங்கம் (ஜெயம்) அவர்களை ஆதரித்தார். கொம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் போட்டியிட்ட அமரர் பொ.கந்தையா அவர்களை ஆதாரித்தார். இறுதியாகத் தமிழ்க்காங்கிரஸ் கட்சியில் போட்டியிட்ட அமரர்.மு.சிவசிதம்பரம் அவர்களை ஆதரித்தார். இவர்கள் எல்லாரிடமும் சமூகத்தை முன்வைத்தே நடந்துகொண்டார். சாதிரீதியாக வேறுபாடு காட்டப்பட்டால் அதற்கு நியாயம் கிடைக்கும்வரை ஓய்ந்திருக்கமாட்டார். இப்படியான சந்தர்ப்பங்களில் மிக ஆத்திரப்பட்டே கருமம் ஆற்றுவார்.

2005ல் நான் தாயகம் சென்றபோது அவர் இருதய, சலரோக நோய்களினால் பீடிக்கப்பட்டிருக்கின்றார் என அறிந்து பார்க்கப்போனேன். அவர் மிகப்பலவீனமுற்ற நிலையில் இருந்ததைக் கண்டு கவலையுற்று இந்நோய்களுடன் முன்னெச்சரிக்கையாக எப்படி வாழ்வது என்பதுபற்றிய எனது ஆலோசனைகளைக் கூறியிருந்தேன். ஒரு சந்தர்ப்பத்தில் நாம் கதைத்துக்கொண்டு இருந்தபோது மயங்கிவிட்டார். அச்சமயம் நானும் அவரது இளையமகளும் சேர்ந்து அவரை ஒருவாறு மயக்கத்தைப் போக்கி சுயநிலைக்கு வந்தபின்பே நான் விடைபெற்றேன்.

அதன் பின்பு அண்மையில் அவரது மறைவுச் செய்தி அறிந்து வேதனையுற்றேன். எமது சமுதாயச் சேவையாளனின் இறப்பு எமக்கு ஒரு பேரிழப்பேயாகும்.

மேலும் அமரர் அவர்களின் நினைவுப் பதிவுகள் மலரில் அவர்பற்றி ஒருசில வார்த்தைகள் எழுதுவதற்கு சந்தர்ப்பம் அளித்தமைக்காக அவரது பிள்ளைகளுக்கும் மலர் ஆசிரியருக்கும் உற்றார், உறவினர்க்கும் நன்றி கூறுவதோடு எனது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இ.வே.செல்வரட்ணம்**
***(கனடா)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்ம ஊர்க் காவலன்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றுதலின் தோன்றாமை நன்று"

எனும் பொய்யாமொழிக்கமைய அமரர் கோபால் துரைசிங்கம் அவர்கள் எங்கள் சமுதாயம் செழித்தோங்க அல்லும் பகலும் அயராது உழைத்த பெருந்தகையாவார்.!

ஒருவர் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பதைவிட எப்படித் தன் நாட்டிற்காகத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தார் என்பதே முக்கியமானதாகும். அன்னாரின் தன்னலமற்ற சமதாயப்பற்றும் அதன் உயர்வுக்கு அவர் உழைத்த பாங்கும்

"ஊருணி நீர்நிறைந் தற்றே உலகலாம்
பேரறிவாளன் திரு"

என்பதற்கிணங்க தன் அறிவையும் ஆற்றலையும் தன் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குப் பயன்படும் விதமாகக் கடமையாற்றினார்.

வல்வெட்டி மேற்கு, இலகடி ஆகிய கிராமங்களில் இருந்த தனியார் காணிகளை அரச உதவியுடன் சுவீகரித்து அதை அவ்வூர் மக்களுக்கு வழங்கினார். "தர்மகுலசிங்க" சனசமூக நிலையத்திற்கும் குணசேகரா விளையாட்டுக் கழகத்திற்கும் சொந்தமாய் மைதானம் அமையவும் நிலைய மண்டபம் அடுக்குமாடியாய் உயரவும் இவரே பிரதான காரணியாய் ஆனவர் என்றால் அது உண்மையிலும் உண்மை.

அவர் ஆற்றிய சேவைகள், தேவைகள் எதையுமே எம்மால் மட்டுமல்ல எமது இளையதலைமுறைகளாலும் மறக்கமுடியாத ஒன்று.

அமரர் அவர்களின் மறைவுச் செய்தி தொலைபேசிமூலம் எமக்குக் கிடைத்ததும் எதிர்பாராத அதிர்ச்சியும் துக்கத்துவமும் ஏற்பட்டது.

ஒன்று எமது சகோதரர் என்ற உணர்வு. இரண்டாவது நாம் வெளிநாட்டில் இருந்தாலும் நம்ம ஊர்க்காவல்காரனாக விளங்கியவர் அமரர் அவர்கள்தான். வெளிநாட்டிலுள்ள பல நம்மவர்கள் அமரர் துரைசிங்கம் அவர்களை பக்கபலமாக நம்பியிருந்தார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணம் எவராலும் எமது சமுதாயக் கோட்டைகளை உடைத்தெறிய முடியாது. அப்படி ஒன்று ஏற்படுமானால் எதிரே நிற்பது எமது துரைசிங்கம் அவர்கள்தான். அதை யாராலும் எதிர்த்து சாதிக்கமுடியாது என்ற நம்பிக்கைதான். அப்பேர்ப்பட்ட சமுதாய காவலன் இன்று எம்மை விட்டுப் பிரிந்தது எமது நெஞ்சங்களைத் தகரச் செய்துவிட்டது.

அமரரின் இளப்பினால் துயர் உற்றிருக்கும் அமரரின் குடும்பத்தார்க்கு எமது அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கின்றோம்

இவ்வண்ணம்
**திரு, திருமதி.ஜெயசேகரம் அதிசயவனிதா தம்பதிகள்..**
***(மொன்றியல், கனடா)***



**இளைய மகளின் மகளுடன் (பேர்த்தி)**

**உறவினருடன்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்னாரின் இறுதி ஊர்வலத்தின் போது...**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது சமுதாயத்தின் கலங்கரை விளக்காய் இப்பூமியில் வாழ்ந்த எமது குலவிளக்கு பப்பா அவர்கள் விண் ஜோதியாக சங்கமித்த செய்தி கேட்டு உடன் விரைந்து எமது துக்கத்தை தணிக்க ஆறுதலும் ஒத்தாசையும் புரிந்தவர்களுக்கும் அமரரின் அமரத்துவச் செய்தியை தொலைதூரத்தில் உள்ளவர்களுக்கு தொலைத்தொடர்புகளை எவ்வித கைமாறுமின்றி தெரிவிக்க உதவியவர்களுக்கும் மற்றும் அமரரின் மறைவுச் செய்தியை ஒலிபெருக்கி, ஆட்டோ வாகனங்கள் போன்றவற்றின் மூலம் தெரிவிக்க உதவி செய்தவர்களுக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளின்போது முழுமையாகத் தம்மை அர்ப்பணித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் கண்ணீரஞ்சலி, துண்டுப்பிரசுரம் வெளியிட்டு உதவிய தர்மகுலசிங்கம் சனசமூக நிலைய நிர்வாகத்தினர்க்கும் 31வது நினைவு தினத்திற்கென உலர் உணவுப்பொருட்கள் கொடுத்து உதவிய உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தினர்க்கும்

அமரரின் "நினைவுப் பதிவுகள்" மலருக்கு ஆக்கங்கள், ஊக்கங்கள் தந்து உதவியோர்க்கும் பொதுஸ்தாபனங்களுக்கும் உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி, தொலைநகல்கள் மூலம் அஞ்சலி செலுத்தியோருக்கும் 08.02.2007 வியாழக்கிழமை இன்று நிகழ்வுறும் அந்தியேட்டிக் கிரியைகள், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள், ஆத்மசாந்திப் பிரார்த்தனைகள், மதிய போசன விருந்துபசாரம் "நினைவுப் பதிவுகள்" உரை வழங்கியோர்க்கும் இம்மலரினை மிகச் சிறப்பாக ஆக்கி, வடிவமைத்து தொகுத்து இக்குறுகிய காலத்திற்குள் செய்துதந்த மலராசிரியருக்கும்

எமது எண்ணத்திற்கமைய தரமாக அச்சுப்படுத்தித்தந்த மதுரன் கிரா(f)பிக்ஸ் நிறுவனத்தினருக்கும் எமது அன்பார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

'மோகன் இல்லம்',
தர்மகுலசிங்கம். ச. ச. நிலையச் சூழல்
வல்வெட்டி.

பிள்ளைகள்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் கோபால் துரைசிங்கம் அவர்களின் வம்சாவழி

**தாய் தந்தை**

கோபால்
தங்கம்

சின்னக்கண்டு
இலட்சுமி

**அமரர் துரைசிங்கம் + சோதியம்மா**

**பிள்ளைகள்**

லலிதா | மோகன் | வாசன் | தேன்மொழி

**மருமக்கள்**

இராசேந்திரம் | யோகதனேஸ்வரி | தேவகி | இராஜவர்மன்

**பேரப்பிள்ளைகள்**

ஜீவிதா
திருபரன்
நிருபரன்
+
மிரேன்
மிதுஷா
+
லவினா
அஷ்வினா
+
தேனுஷா

மதுரன் கிறா(f)பிக்ஸ், அல்வாய்.
*T.P.No: 021 226 3099, 0776688318.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org